13

# காரைக்காலம்மையாரின் இறைச்சிந்தனை

**முனைவர் வே. லீலாவதி**

**உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,**

**ஸ்ரீமதி தேவ்குன்வர் நானாலால் பட் மகளிர் வைணவக் கல்லூரி,**

**குரோம்பேட்டை, சென்னை – 44.**

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்ககாலம் தொடங்கி இன்று வரை ஆங்காங்கே கடவுள் வழிபாடு பற்றிய குறிப்புகளைக் காணமுடிகிறது. சங்ககாலத்தில் இயற்கையோடு இணைந்து இன்ப வாழ்வில் திளைத்த மக்கள், அந்நிய படையெடுப்பால் இருண்ட வாழ்க்கைக்குத் தள்ளப்பட்டனர். பின் வந்த பல்லவர் ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட சமய மறுமலர்ச்சியினால் மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட இறைநிலையை உணர்ந்து பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு கொள்ளத் தொடங்கினர். இக்காலக்கட்டத்தில் சைவமும் வைணவமும் செழித்தோங்கியது. சிவனை முழுமுதற் கடவுளாக வணங்கும் சமயம் சைவசமயம் ஆகும். சைவ சமயத்தைச் சார்ந்து எழுந்த இலக்கியங்கள் சைவ இலக்கியங்கள் எனப்படும். சைவத்தைப் போற்றுகின்ற பனுவல்களாகத் திருமுறைகள் விளங்குகின்றன. திருமுறைகளை நாளும் ஓதினால் உய்நிலை அடையலாம் என்பது நமது ஆன்றோர்வாக்கு. "திருமுறைகள் நமது வாழ்வின் நெறிமுறைகள்" எனத் தவத்திரு குன்றக்குடி அடிகளார் குறிப்பிடுவார். திருமுறைகள் பழந்தமிழ் இசையையொட்டிய பண்களுடன் பாடப்பட்டு வருகின்றன. சைவக் கோயில்களிலும், சைவர்கள் வீடுகளிலும், பாடசாலை முதலிய இடங்களில், சமய நிகழ்ச்சிகளின் போதும் திருமுறைகள் இன்றளவும் பாடப்பட்டு வருகின்றன. இவை பன்னிரு திருமுறைகள் என்று அழைக்கப்படுகிறது. தேவாரம், திருவாசகம் தொடங்கி, பெரியபுராணம் வரை பாடப்படும் பன்னிரு திருமுறைகள் சைவர்களுக்கு வேதங்கள் ஆகும். அதனால் பன்னிரு திருமுறைகள், 'தமிழ் வேதம்' என்று போற்றப்படுகின்றன. சைவத் திருமுறையில் ஒன்றான பெரியபுராணம் அறுபத்திமூன்று நாயன்மார்களையும் ஒன்பது தொகையடியார்களையும் விரிவாக கூறுகின்றது. இத்தகு போற்றுதலுக்குரிய சைவ வேதம் என அழைக்கப்படும் பன்னிரு திருமுறையில் புனிதவதியார் பங்களிப்பு எவ்வாறு காணப்படுகிறது என்பதை ஆராய்வது இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

**திறவுச் சொற்கள்:** சைவத்திருமுறை, அறுபத்திமூன்று நாயன்மார்கள், ஒன்பது தொகையடியார்கள், இசைஞானியார், புனிதவதியார், மங்கையர்க்கரசியார், பெரியபுராணம், பன்னிரெண்டாம் திருமுறை.

**முன்னுரை**

சைவக் கடவுள் சிவன். சிவபெருமானால் அகத்தியருக்கு உணர்த்தப்பட்டது நம் தாய்மொழியான தமிழ்மொழி. அத்தகைய தாய்மொழியின் சிறப்பை உணர்த்த தமிழ்த்தூதுவர் தனிநாயக அடிகளார், "வணிகமொழி ஆங்கிலம் என்றால், சட்டத்தின் மொழி இலத்தீன் என்றால், இசையின் மொழி கிரேக்கம் என்றால், தத்துவத்தின் மொழி ஜெர்மன் என்றால், தூதின் மொழி பிரெஞ்சு என்றால், தமிழ் பக்தியின் மொழி என்றார். மனிதன் தன் இறை எண்ணத்தை பாமாலையாக்கி இறைவனை அர்ச்சித்து போற்ற உதவுவது மொழியாகும். மதுரமான மொழி என போற்றப்படும் நம் தாய்மொழியோடு சேர்த்து சைவம், வைணவம், சமணம், பௌத்தம், கிறித்துவம், இசுலாம் என்று சமயங்கள் வளர்ச்சி பெற்றன. இத்தகைய வளர்ச்சி பெற்ற சமயங்களுள் ஒன்று சைவ சமயம். இச்சைவ சமயத்திற்கு அடிப்படையான நூல்கள் சைவத்திருமுறை ஆகும். சைவ சமயத்தில் பன்னிரெண்டாம் திருமுறையாக வைத்துப் போற்றப்படுவது பெரியபுராணம். பன்னிரெண்டாம்

திருமுறையான பெரியபுரானத்தில் காரைக்காலம்மையார் எவ்வாறெல்லாம் பங்காற்றியுள்ளார் என்பதை இங்குக் காண்போம்.

**பெண்மையைப் போற்றிய சைவம்**

பெண் என்பவள் உலக உயிர்களின் உயிர்ப்பானவள் ஆவாள். பெண் என்னும் சொல் பேணுபவள், பேணப்பட்டவள், பேணப்பட வேண்டியவள் என்ற பொருளில் அமைந்ததாகும். பெண்ணின் பெருமையைப் போற்றும் வகையில் தொல்காப்பியர்,

**“அச்சமும் நாணமும் மடனும் முந்துதல் நிச்சமும் பெண்பாற்குரிய”1**

**“செறிவும் நிறையுஞ் செம்மயும் செப்பும் அறிவும் அருமையும்**

**பெண்பாலன”2**

இப்பெண் ஆணின் சரிபாதியாவாள். ‘சிவம் இல்லையேல் சக்தி இல்லை, சக்தி இல்லயேல் சிவம் இல்லை’ என ஆன்மீகவாதிகள் புகழ்கின்றனர்.

பெண்கள் பல துறைகளில் சிறந்து விளங்கியுள்ளதை நமது இலக்கியங்கள் பறை சாற்றுகின்றன. பக்தி இலக்கியக் காலத்தில் பெண்களுக்கு சம உரிமை வழங்கப்பட்டது. உலகில் நிலவும் பல்வகைச் சமயங்களில் இறைவன்பால் நல்லாற்றுப்படுத்தும் சீர்மையும் தொன்மையும் உடையது சைவசமயம். சைவ உலகில் பெண்களை இழிவாக கருதும் நிலை இல்லை. சைவ நூலான பன்னிரெண்டாம் திருமுறையில் பெண்கள் ஆற்றிய பங்களிப்பு என்றும் போற்றுதற்குரியது.

**பெண்களைப் போற்றும் பெரியபுராணம்:**

சைவ சமயத்தின் அடிப்படை நூல்களாகத் திகழும் பன்னிரு திருமுறை பெண்களின் உயர்தனிச் சிறப்பை நயம்பட எடுத்தியம்புகின்றது. இதைச் சேக்கிழார் பெருமான் தாம் பாடியருளிய பன்னிரெண்டாம் திருமுறையாகிய பெரியபுராணத்தில் தெளிவாகப் பதிவுசெய்துள்ளார்.

பெண்கள் சமூக மாற்றத்திற்கும், ஏற்றத்திற்கும் அச்சாணிகள், படித்த பெண்கள் நாட்டிற்கும், வீட்டிற்கும் ஒளி விளக்குகள். பெண்ணைப் பற்றி பாடாத கவிஞர்கள் இலர்; பாடாத புலவர்கள் இலர்; எழுதாத ஏடில்லை, ஏற்றம் தராத எழுத்தாளர்கள் இல்லை என்றே கூறலாம். எனவே தான் கவிமணி,

**"மங்கையராகப் பிறப்பதற்கே -நல்ல**

**மாதவம் செய்திட வேண்டுமம்மா அவர்**

**பங்கயக் கைந்நலம் பார்த்தலவோ -இந்தப்**

**பாரில் அறங்கள் வளருமம்மா.”3**

எனப் பாடினார். இந்த உலகின் உருவாக்கத்திற்கு உண்மையான கருவாய் இருப்பவள் பெண். அப்பெண்ணைப் போற்றிப் பேசாத இதிகாசங்களோ, இலக்கியங்களோ, எழுத்தாளர்களோ இல்லை எனலாம். சைவத் திருமுறைகளில் பன்னிரெண்டாம் திருமுறையாக அமைந்திருப்பது பெரியபுராணம் ஆகும்.

இப்பெரியபுராணத்தில் இடம்பெறும் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் காரைக்கால் அம்மையார், மங்கையர்க்கரசியார், இசைஞானியார் ஆகிய மூவரும் பெண்கள் ஆவர். இவர்கள் அல்லாது நாயன்மார்களின் பக்தி இயக்கத்திற்குப் பேருதவியாக இருந்த திலகவதியார், இளையான்குடி மாறநாயனார் இறைவியார், அப்பூதியடிகள் இறைவியார், சிறுதொண்ட நாயனாரின் இறைவியார் போன்ற பெண்கள் பற்றிய செய்திகளும் பெரியபுராணத்தில் இடம்பெறுகின்றன. ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப்பின் ஒரு பெண் இருக்கிறாள் என்பது போல நாயன்மார்களின் பக்திக்கு வித்தாக பெண்கள் உள்ளனர் என்பதைப் பெரியபுராணத்தில் காணமுடிகிறது.

**புனிதவதியார்:**

காரைக்கால் அம்மையார் என்று அழைக்கப்படும் புனிதவதியார் மூன்று பெண் நாயன்மார்களில் ஒருவரும், மூத்தவரும் ஆவார். கயிலை மலையின் மீது கைகளால் நடந்து சென்றவரை, சிவபெருமான் அம்மையே என்று அழைத்ததாலும், காரைக்கால் மாநகரில் பிறந்தவர் என்பதாலும் காரைக்கால் அம்மையார் என்ற பெயர் வழங்கப்படுகிறது. இவர் இசைத்தமிழால் இறைவனைப் பற்றி முதன்முதலாகப் பாடியவராகவும், தமிழுக்கு அந்தாதி எனும் இலக்கண முறையை அறிமுகம் செய்தவராகவும் அறியப்பெறுகிறார். அற்புதத் திருவந்தாதி, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், திருவிரட்டை மணிமாலை போன்ற நூல்களைத் தந்து சைவத்தமிழுக்குப் பெரும் தொண்டாற்றியுள்ளார். இவருடைய பதிக முறைகளைப் பின்பற்றியே பிற்காலத்தில் தேவாரப் பதிகங்கள் இயற்றப்பட்டன.

**இல்லறமும் இறையறமும்**

பரமதத்தன் என்பவரை மணந்து இல்லற வாழ்வில் ஈடுபட்டிருந்தவர், ஒரு நாள் கணவன் கொடுத்தனுப்பிய இரு மாம்பழங்களில் ஒன்றினைச் சிவனடியாருக்குப் படைத்துவிட்டு, அந்த மாம்பழத்தினைக் கணவன் கேட்க, இறைவனிடம் வேண்டி மாம்பழத்தினைப் பெறுகிறார். நடந்தவைகளைக் கண்டதும் அதிர்ச்சியுற்ற பரமதத்தன் ‘இவள் சாதாரணப் பெண் அல்ல. தெய்வப்பிறவி. இனி இவளுடன் குடும்பம் நடத்த இயலாது’ என்று மனதிற்குள் எண்ணினான். பாண்டிய நாட்டிற்குச் சென்று வேறு பெண்ணைத் திருமணம் செய்து கொள்கிறான். அவர்கள் இருவருக்கும் பிறந்த குழந்தைக்கு புனிதவதி எனப் பெயரிட்டான். இதை அறிந்த சுற்றத்தார்கள் புனிதவதியை சேர்த்து வைப்பதே முறை என்று எண்ணி அவளை பாண்டிய நாட்டிற்கு அழைத்து வந்தனர். இதையறிந்த பரமதத்தன்,

> **“மற்றவர் தம்மை நோக்கி மானுடம் இவர்தாம் அல்லர்**
> **நற்பெருந் தெய்வ மாதல் நானறிந் தகன்ற பின்பு**
> **பெற்றஇம் மகவு தன்னைப்பேரிட்டேன் ஆதலாலே**
> **பொற்பதம் பணிந்தேன் நீரும்போற்றுதல் செய்மின் என்றான்.”4**

எல்லோரையும் நோக்கி, இவள் மானிடப் பிறவி அல்ல, தெய்வப் பிறவி. ஆகையாள் அவளை விட்டு நீங்கி வந்தேன் என்று சொல்லி, பரமதத்தனும் மனைவியும் அவர்களது மகளும் புனிதவதியின் கால்களில் விழுந்து வணங்கினார்கள். அதனைக் கண்டதும் புனிதவதியும் உறவினர்களும் அதிர்ச்சி அடைந்தனர்.

கணவன் தன்னை நிராகரித்ததைக் கண்ட புனிதவதி இறைவனிடம் “ஐயனே, கணவனுக்காக கொண்ட அழகு இனி தேவையில்லை. ஆகையால் எலும்புகளால் ஆன பேய் உருவத்தை எனக்கு வழங்குங்கள்.” என்று உருகி வேண்டினார். அம்மையாரின் வேண்டுகோளுக்கு மனமிரங்கி இறைவனார், புனிதவதியாரின் உடலில் இருந்த புற அழகுக்குக் காரணமான தசைகளை நீக்கி, எலும்புகளாலாகிய பேயுருவை தந்தருளினார். அதனைக் கண்டதும், பரமதத்தனும், உறவினர்களும் அஞ்சி அம்மையாரை வணங்கி அவ்விடம் விட்டு நீங்கினர்.

**இறைக்குறையை நிறையாக்கிய பெண்மை:**

ஒவ்வொருவருக்கும் ஒரு குறை உலகில் உண்டு. கையிலாயத்தில் சிவபெருமானுக்கு ஒரு குறை. நமக்கொரு அம்மா இல்லையே என்ற வருத்தம். அதைப் போக்கியவர் காரைக்காலம்மையார். தாய்மையாகிய பெண்மையின் குணமே பிள்ளையின் மனதை அறிதல் தானே, அக்கருத்துக்கு ஏற்ப

இறைகுறையை நிறையாக்கியவர்.

**“பிறந்து மொழிப்பயின்ற பின்னெல்லாம் காதல்**

**சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்” 5**

என வாழ்ந்தவர் காரைக்காலம்மையார். கயிலாயத்தில் இறைவனைக் காண தன் தலையாலே நடந்து செல்கிறார். இதனைக் கண்ட உமையம்மை இறைவனாரிடம் “என்புருக் கொண்டு தலைகீழாய் நடந்து வருவது யாரோ?” என்று வினவினார். இறைவனார் “இப்பெண்மணி நம்முடைய அம்மை. நம்மிடம் விரும்பியே இவ் என்புருவைப் பிரார்த்தித்துப் பெற்றார்.” என்றார். அம்மையார் கயிலையை அடைந்ததும் இறைவனார் “அம்மையே, வருக! அமர்க!” என்று கருணையோடு வரவேற்றார். இறைவனின் குறை இச்சொல்லில் நிறைவுற்றது. தன் குறையைப் போக்கிய அம்மையாருக்கு இறைவனார் ‘நீ வேண்டும் வரம் யாது?’ என்று வினவினார். அதற்கு அம்மையார்,

**“இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்**

**பிறவாமை வேண்டும், மீண்டும் பிறப்புண்டேல் உன்னையென்றும்**

**மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி**

**அறவா நீயாடும்போது உன் அடியின்கீழ் இருக்க வென்றார்.”6**

அப்பா என்றும் உன்னை மறவாத இன்ப அன்பு வேண்டும். “பிறவாமை வேண்டும். மீண்டும் பிறந்தால் என்றும் உன்னை மறவாமை வேண்டும். என்றும் உன் தாமரைத் திருவடிக்கீழ் உன் புகழைப் பாடி உறையும்படி திருவருள் புரிய வேண்டும்.” என்று மனமுருகி வேண்டினார். இறைவனார் “அவ்வாறே ஆகுக. தென்னாட்டின் திருவாலங்காட்டில் யாம் புரியும் நடனத்தைக் கண்டு இன்புற்று அங்கிருந்து நம்மைப் பாடுவாயாக.” என்று அருள்புரிந்தார்.

**தாயின் அன்பு:**

இறைவனால் அம்மையே என்றழைக்கும் பேறு பெற்றவராகிய அம்மையார் தன்னுடைய அற்புதத் திருவந்தாதியில் தாயன்போடு,

**“அரவமொன் றாகத்து நீநயந்து பூணேல்**
**பரவித் தொழுதிரந்தோம் பன்னாள் - முரணழிய**
**ஒன்னாதார் மூவெயிலும் ஒரம்பால் எய்தானே**

**பொன்னாரம் மற்றொன்று பூண்.”7**

பகை உணர்வு கொண்ட அசுரர்களின் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று கோட்டைகளையும் சிறு புன்னகையால் அழித்தவனே! உன்னை நீண்ட காலமாக வணங்கித் தொழுது கேட்கிறேன். பாம்புகளை அணியாமல், பொன்னால் ஆகிய அணிகலன்களை அணிந்து கொள்க! என்று இறைவனிடத்தில் தாயன்போடு கேட்டுக்கொள்கிறார். மேலும்,

**“பூணாக வொன்று புனைந்தொன்று பொங்கதளின்**
**நாணாக மேல்மிளிர நன்கமைத்துக் - கோள்நாகம்**
**பொன்முடிமேற் சூடுவது மெல்லாம் பொறியிலியேற்**

**கென்முடிவ தாக, இவர்.”8**

அணியாக ஒரு பாம்பையும், இடையில் கயிறாக மற்றொன்றையும், விஷம் நிறைந்த பாம்பைத் தலையில் அணிந்தும் காட்சியளிக்கிறாயே! இதெல்லாம் எங்கு சென்று முடியுமோ! என்று ஒரு பிள்ளைக்காக அம்மா எப்படி தவிப்பாளோ, அது போல் அம்மையார் பற்பல பாடல்களில் தாயன்பைப்

புலப்படுத்தியுள்ளார்.

மேலும் உம் திருமுடியில் உள்ள பாம்பையும் மதியையும் கங்கையாறு வெள்ளமாய்ப் பெருக்கெடுத்து இழுத்துக்கொண்டு ஓடினால் உம்மால் தடுக்க இயலுமோ? நீ பாம்பை அணிந்துகொண்டு மண்டையோட்டில் பிச்சை எடுக்கச் சென்றால் பெண்கள் அச்சமுறுவர் அல்லவா? நீ சுடுகாட்டுக்கு நாட்டியம் ஆடச் செல்கையில் உமையையும் ஏன் அழைத்துச் செல்கிறீர்? அவள் அஞ்சுவாள் அல்லவா? என இவ்வாறெல்லாம் இறைவனை நோக்கி தாயுள்ளத்தோடு கேட்கிறார்.

**தொகுப்புரை:**

புனிதவதியாராகிய காரைக்காலம்மையார் தன் கணவன் தன்னை விட்டு விலகிய போதும் கலங்காமல் இறை நினைவோடு வாழ்ந்தவர் என்பதை உணரமுடிகிறது. இறைவனிடம் உரிமையுடன் கேள்வி எழுப்பியவர், தன் கணவனிடம் கேள்வி கேட்கவில்லை? என்ற ஐயம் எழுகின்றது. உலகில் எந்தப் பெண்மணிக்கும் கிடைக்காத அரிய பேறாக இறைவனால் அம்மையே! என்று அழைக்கப்பட்ட சிறப்புக்குரியவர் என்பதைக் காணமுடிகிறது. நாயன்மார்களில் ஆணுக்கு இணையாகப் பெண்ணும் சம உரிமை பெற்றுள்ளார் என்பதை அறியமுடிகின்றது. பெரியபுராணத்தில் காணலாகும் காரைக்காலம்மையாரின் பக்தி திறத்தையும் அவரின் பங்களிப்பையும் இக்கட்டுரையின் மூலம் காணமுடிகின்றது.

**சான்றெண் விளக்கம்:**

1. தொல்காப்பியம், பொருளதிகாரம், நூ.96
2. மேலது, நூ.206
3. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, மலரும் மாலையும், ப. 148
4. பெரியபுராணம், திருநின்ற சருக்கம், பா.1768
5. காரைகாலம்மையார், அற்புதத் திருவந்தாதி, பா.1
6. பெரியபுராணம், திருநின்ற சருக்கம், பா.1781
7. காரைகாலம்மையார், அற்புதத் திருவந்தாதி, பா.27
8. மேலது, பா.28.

**துணை நூற் பட்டியல்**

1. பெரியபுராணம் மூலமும் உரையும், அ.பாலையன், சாரதா பதிப்பகம், சென்னை-14.
2. அற்புதத் திருவந்தாதி, க.வெள்ளைவாரணனார், சாரதா பதிப்பகம்,
சென்னை-14.
3. தொல்காப்பியம், மெய்யப்பன் பதிப்பகம், சென்னை.
4. தமிழ் இலக்கிய வரலாறு, முனைவர் கா.கோ.வேங்கடராமன், கலையக வெளியீடு, நாமக்கல்.
5. மலரும் மாலையும், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, கௌரா பதிப்பகம், சென்னை.
6. இணையம் – விக்கிபீடியா தளம்.